சிவமயம்



அன்னாகப்

# திருமதி சதாசிவரத்தினம் ஞானமணி

(இளைப்பாறிய ஆசிரியை)

அவர்கள்

இறைவன் திருவடி இணைந்தமை

பற்றிய

# நினைவு அஞ்சலி மலர்

வெளியீடு:

27 - 1 - 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

எமது குடும்ப ஒளித் தீபமாகத் தோன்றி
அன்பும் பண்பும் பல மாண்புகளும் பொலிய
கற்பகதருவென வாழ்ந்து

92 - 12 - 28ல் விண்ணுலகெய்தி

அமரரான

## திருமதி சதாசிவரத்தினம் ஞானமணி

அவர்களின்

பாதாரவிந்தங்களில்

## இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
கணவன்
தம்பிமார்
தங்கை
மைத்துனர்
மைத்துனிகள்
பெறாமக்கள்
மருமக்கள்

...ல்தானே,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி.
...சகம்.
...-1-27.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் பண்பும் அருளுமுடைய ஆசிரியை

# திருமதி சதாசிவரத்தினம் ஞானமணி



மண்ணில்
1928-9-6

விண்ணில்:
1992-12-28

## திதி நிர்ணய வெண்பா

ஆங்கிரச மார்கழித் திங்கள் அவிட்டம் சேர்
ஓங்கு பூருவமதி நாடிய பஞ்சமி திதியில் — வண்ணைநகர்
பண்புமிகு சதாசிவரத்தினம் நற்றுணைவி ஞானமணி
நாண்முகசெல்வி தோடுடைத் தென்னையினை தாள் சேர்ந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி ஞானமணி சதாசிவரத்தினம்
# அஞ்சலி

அன்பும் பண்பும் அருளும் பொருளும் வாய்க்கப் பெற்றவர் திருமதி ச. ஞானமணி அவர்கள். பெண்மைப் பண்பும், பொறுமையும் இவரிடம் நான் கண்ட பெரும் பண்புகளாகும். என்னுடன் ஏழு ஆண்டுகள் ஒன்றாய் ஆசிரியப் பணிபுரிந்த அனுபவத்தை இன்று எண்ணிப் பார்க்கிறேன். முகத்திலே புன்னகை தவழ மெதுமையான பேச்சுடன் எம்மோடு வாழ்ந்த காலம் மிகவும் இனிமையானது. கொழும்புமா நகரிலே அமைந்த முஸ்லிம் பெண்கள் பாடசாலையிலே எமது கற்பித்தல் பணி இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இன்று திருமதி ஞானமணி அமரராகி விட்டார்! எதிர் பாராத விதமாக இவரின் மறைவு எமக்கெல்லாம் பெரும் திகிலை ஏற்படுத்தி விட்டது. சுண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இவர் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான சதாசிவரத்தினம் அவர்களின் பாரியார் என்பதிலேயும் பெருமைக்குரியவர், இவர்கள் இருவரும் தெல்லிப்பழை துர்க்கா தேவியின் மேல் நீங்காத பக்தி கொண்டவர்கள் பல்லாண்டு காலமாக எங்கள் குடும்பமும் இவர்களின் குடும்பமும் அன்னியோன்னியமாகப் பழகி வந்துள்ளது என்பது இங்கு நினைக்கற்பாலது.

இன்று எமது அன்புக்குரிய ஞானமணி அவர்களின் புன்னகை தவழும் திரு முகத்தைக் காண முடியாது. ஆனால் அவருடைய இன்மொழிகள் என் செவியில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. என்றும் இவரின் நினைவு எம் முள்ளத்தை விட்டு அகலாது உள்ளம் நிறைந்த அஞ்சலி கூறி ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தித்து அமைகிறேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
துர்க்காபுரம் மகளிர் இல்லம் தலைவர்
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிறைந்த
# ஞானமணி ஆசிரியர் அவர்களே

சுன்னாகம் இந்து மகளிர் நலன் புரிக் கழகத்தின்
போஷகராக இருந்து நல்வழி காட்டிய உத்தமியே!
உங்கள் திடீர் மறைவின் செய்தி கேட்டு நாங்கள் ஆறாத்
துயரத்தில் ஆழ்ந்தியுள்ளோம். அன்பின் வழி நின்று
சகலருக்கும் குல மத வேறுபாடின்றி சமூக சேவையை
உயர்ந்த இலட்சியமாகக் கொண்டு ஆற்றிய சேவையை
நாங்கள் மறக்கமாட்டோம். எமது கழகத்தின் வளர்ச்சிக்கு
தாங்கள் காட்டிய ஆதரவு, அருளிய புத்திமதிகள் எமது
நினைவில் இருந்தும் நீங்காதவையாகும்.

தங்கள் ஞானம் நிறைந்த பார்வையையும், புன்சிரிப்பை
யும் எப்போது காணுவோமோ! ஆசிரியராகப் பணிபுரிந்து
இளைப்பாறிய பின் வீட்டிலே முடங்கி இருக்காது ''மக்கள்
சேவையே மகேசன் சேவை''யெனக் கருதி பொதுப்
பணிகளில் ஈடுபட்டு எங்கள் சமூகத்தின் உயர்வுக்கும் கல்வி
வளர்ச்சிக்கும் ஆற்றிய தொண்டினை நாங்கள் மறவோம்.
சைவ சமய வளர்ச்சிக்கு தாங்கள் ஆற்றிய பணி மகத்
தானது. சிறுவர்களுக்கு எமது கழகத்தின் சார்பில் சைவ
நீதி வகுப்பை நடாத்தி சமயப்பற்றை அவர்களுக்கு ஊட்டி
வளர்த்தீர்கள்.

பிறவி எடுத்த மனிதர்கள் எல்லாம் இறப்பது உண்மை
யானது. இதில் இருந்து விலகமுடியாது. ஆனாலும் நாங்கள்
உங்கள் மறைவை நினைத்து கவலைப்படுகிறோம், வேதனைப் படுகிறோம். ஆனாலும் உங்கள் இனிய பார்வையும்
அன்பு உள்ளமும் எங்கள் மனதை விட்டு அகலவே மறுக்
கிறது. மறக்கவும்மாட்டோம்.

அன்பே வடிவான திருமதி ஞானமணி சதாசிவத்தின்
அவர்களே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவன் அருள் புரிவாராக. வாழ்க உங்கள் நாமம்
வளர்க நீங்கள் காட்டிய பணி.

''ஊருக்காக உழைத்த உத்தமியே
உன் உருவைக் கண்டு மகிழ்வது எந்நாளோ!''

வணக்கம்

திருமதி பஞ்சாட்சரராணி யோகானந்தராசா
தலைவர்
இந்து மகளிர் நலன் புரிக் கழகம்

பண்டித மாணிக்கத்தியாகராசா வீதி
சுன்னாகம்
15 01-199[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் ஊட்டியவருக்கு என் அஞ்சலி

குடும்ப ஒளி விளக்காய் திகழ்ந்து, பாசத்தின் சுடராய் வாழ்ந்து, சிரித்த முகமாய் அனைவரையும் நேசித்து, எங்கள் இதயத்தில் என்றும் நிறைந்திருக்கும் அன்பின் உறைவிடமே! அகரத்தின் பிறப்பிடமே! அமைதியாக அவசரமாக உனக்கு வந்த அழைப்பு என்னை மட்டுமல்ல, அனைவரையும் திடுக்கிட வைத்ததே! பாரினில் வாழ்ந்த போது பண்புள்ள நற்பிரஜை(யாய்)களை படிப்பித்தே உருவா(க்கி)னாய்.

நீ ஊட்டிய கல்வியால் உயர்ந்து வளர்ந்த உத்தமர்களை கண்டு மனம் மகிழ்ந்து புளகாங்கிதமடைந்த நீ ஞானத்தை ஊட்டும் மணியாய் தொடர்ந்தும் பாரினில் வாழ மனமின்றி இறையகத்தில் வாழ ஆர்வமுடன் விரைந்தாயோ! உன் பிரிவை நினைக்க என் நெஞ்சம் கவலை எனும் புயலதனில் சூழுகின்றதே. எல்லோர்க்கும் இனியவராய் வாழ்ந்து மறைந்த என் அன்பின் ஆசிரியையே, தாயே, ஞானமணியே உனை மறவேன். நெஞ்சம் எனும் அகல் விளக்கில் கண்ணீர் எனும் எண்ணெய் ஊற்றி அஞ்சலி செய்கின்றேன்.

அருட்திரு. ஞா. அற்புதராஜா அ. ம. தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தமும் மனித நேயமும் நிறைந்த மாதரசி

எனது அன்பிற்குரிய திருமதி ஞானமணி சதாசிவரத்தினத்தின் மரணச் செய்தியைக் கேள்வியுற்று நானும் எனது குடும்பத்தவர்களும் அதிர்ச்சியும் கவலையுமுற்றோம்.

இவரும், இவரின் கணவரும், நானும் சுன்னாகம் மயிலணி சைவ வித்தியா சாலையில் ஒரு வகுப்பில் கற்றவர்கள். தூரத்து உறவினருங்கூட. அமரத்துவம் எய்தியவர் அமைதியான இயல்புடையவர். சற்றும் தற்பெருமையற்ற சாந்தசொரூபி எனலாம்.

கொழும்பில் பல வருடங்கள் ஆசிரியப் பணி புரிந்து கொண்டு.

''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை''

என்பதற்கமைய தனது ஆசிரியப் பணியிலும் குடும்ப வாழ்விலும் மிக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தவர். பின்பு பல வருடங்கள் யான் ஆரம்ப கல்வி கற்ற சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலையில் பணியாற்றினார். பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் ஆகிய முத்திறத்தவர்களதும் நேயத்தையும், பாராட்டுதலையும் பெற்றவர்.

இவரது கணவர் திரு. பூ. சதாசிவரத்தினம் அவர்கள் ஒரு சட்டத்தரணியாகவும், பின்பு ஒரு நீதிபதியாகவும் பணி புரிந்ததனாலும் இவ் பெருமைகள் பல பெற்றவர். சடுதி இயற்கை மரணம் சம்பவித்ததானாலும் இவரினது ஆத்ம புனிதத்தைக் காட்டுகின்றது என்றால் மிகையாகாது. இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்

அன்பன்

வைத்திய கலாநிதி ஜி. ஜோர்ஜ் டி. ஏ. எம்.,
சமாதான நீதிபதி

கபிரியேல் வைத்திய சாலை,
சுன்னாகம்.
23-1-93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

சந்திர சமான வர்ண ளாதிமுகன்
இந்திர லோகத் தோரு மூலகோரும் — தம்மிடர் நீங்க
வந்தனை செய்து பலவல் லாற்றல் பெறுவரிவன்
சுந்தர பாதம் தினம் தொழுது.

## சாற்றுகவி

பெற்றார் சூடிய பெயரை மெய்ப்பிக்கு மறிவும்
உற்றா ருறவினர் நாட்டமு மாதரவும் — நிறைவாழ்வில்
மற்றுயிர் நேயத்தாலீர் பத்தாண்டு புலால்விலக்கி
வீற்றிருந்த நல்லாள் கதைகூறக் கடாட்சந்தா.

## தோற்றம்

பேரூர் தெல்லிப்பளை வன்னுவகுலசீலன் அருமறுந்துணை
நாகமுத்துவ மீன்ற தேர்மையன் கட்டடக்கலைஞன்
வேலுப்பிள்ளைக்கும்
சீருடன் தென்னும் நெறியுநிறை சுன்னையம் பதியில்
ஏர்மங்களமு மெழில் நெசவுத் யுடவை வணிபமுமாக
ஊருக்குள் பல்தொழில் வளமுடை நற்குடியுதித்த
சனப்பிரியன் சண்முகமும் பெண் இலட்சுமியுமீன்ற
சீருடன் வளர்த்த செல்வி வள்ளியம்மைக்கும்
பாரிடே உதித்தனள் வண்ணமூதல் மகளாக 1926-9-6ல்

## மழலைப் பருவமும் ஆரம்ப கல்வியும்

மழலைப் பருவமதை மாதா பிதா மாமன் மாமியர்
மற்றுறவினர் சூழ நல்லெழில் தெல்லிப்பளையில்
அழகுறக் களித்து அவ்வூர் ''யூனியன்'' இருமொழிப்
பள்ளியில்
அரிச்சுவடு முதல் ஐந்துவரை அடுக்கடுக்காய்க் கற்றுநற்
பழக்கமும் பாடமும் பகபரத்தாணிபோற் பதியுங்காலை
பற்றுள்ள தம்பி ஞானரத்தினமுடன் அன்னைக்கவர்
தாய் ஆசியுடன்
வழங்கிய வண்ணைச் சீர்மனை தனில் சுன்னாகர் வதியுங்கா
லாங்கே
வனப்புமிகு மயிலணிச் சைவ வித்தியா சாலைமேல்
வளர்கூடத்தில்
பழமைசேர் சைவ நெறியுடன் பல்கலையும்
பயின்றாளன்றோ ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைநிலைக் கல்வி

கணிதத்திற் றையலில் பன்னத்தி — லேனை நெறிகளிலும்
களங்கமில் தெள்ளறிவும் தேர்வுகளிலுயர் நிலையுமாங்கு
பணிபுரிந்த வாசிரிய மணிகளன்புசால் ஆதரவும்
பாராட்டுப் பலவும் பாங்குடனே பெற்றாளே யிப்பாவை
அணியணியா யிவன்பெற்ற பரிசில்களில் விவேகானந்த
அவையினரின் மதியத் தேர்வி லிவர்வென் றெடுத்த
மணியான 'சைவநெறி முதற்பரிசு' முழு இலங்கையிலே
மாணவி தன் பள்ளிக்குச் சேர்த்த புகழாம்.

## ஆசிரிய பயிற்சி

ஏழேழாம் ஆண்டு ஏராறம்கு குடிவாழ் கோப்பாயூரில்
ஏகமாய்ப் புகழ்பூத்த மகளிர் ஆசிரிய பயிற்சிக் கூடம்புக்கு
தாழேந்தும் தனிததுவனின் கடாட்சத்தாலே கல்வித்
தகவுடை வித்தகராம் பேராசான்களிடம் என்றும்
மாழாத கல்வியும் கேள்வியும் போதனா பயிற்சியும்
பெருமையும் பனவுறுதியும் வினைத்திறனு மெதிலும்
தாழாத தன்னம்பிக்கையுட னதனையும் இதற்கீடுசெய்
தக்கோருறவும் வளர்சிறார் நேயமும் பெற்றனளே.

## ஆசிரியப்பணி நாடல்

உள்ளூரிற் குருப்பணி உளப்பூரிப்புட னாற்றவெண்ணா
ஊழியுள்ள காலமாய்க்குல ஏற்றத்தாழ் விருந்ததனால்
வன்னுவ குலத்தோரு மேனை சோதர மரபினரும் தம்
ஊழ்வினையை நொந்து வெளிமாகாண
வேலைதேடினரக்காலம்
கள்ளமில்லா நெஞ்சைக் கல்லாக்கி உற்றாரைவிட்டகன்று
கவின்மொழி பல பேசிடும் தலைநகர் பணிநாடிப்
போந்தக்கால்
உள்ளத்தா லுயர்ந்த உறுதலைவர் செல்லநாயகமும் மற்
றாங்கு ஆசிரியர் உறவினன் சரவணையும் உதவினரே.

## ஆசிரியப்பணி

தலைநகர் வாழிஸ்லாமிய மங்கையர்க் கேகமாய்
தமிழ்மொழிக் கல்விக்கோர் தனிக்கூடம்
பாத்திமா பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைபோன்றாங் கடர்ந்துவாழ் சோதரர்
எம்மமிர்த மொழியுடன்
மாண்புசேர் ஆதிமொழி அரபும் தம்மார்க்க
மொழியாயுடையர்
மலைகண் வீழருவிகள் தண்ணொளில் பரப்பு
நம்மிலங்கை விழநாட்டில்
நால்வகை யினஞ்சேர் நல்லாசிரியர் பணிபுரியப்
பள்ளிதனில்
நிலைபெற் றாழியம் விருப்புட னேற்றனள்
நீள்விழிப் பொன்மகள் ஞானமணியெனும் நல்லாள்.

அடல்பொலி நன்னகர் நீர்கொழும்பிலாதி
நற்குடித்தோன்றல்
ஆசிரியப் பணி முதிர்வுட னிருசுய மொழி வன்மையும்
பண்பும்
கடல்போல் கருணையுமுடை திருமதி பர்னான்டோவு
மவர்பின் வரு
கண்டித் தொன்னகர் நீதியறிஞர் பொன் மகள்
மும்மொழிப் பாண்டித்தியமும்
கடமையில் மென்மையும் சார்ந்தாரைக்காக்கு நெறியு
முடை திருமதி றஹீமும்
கற்றபடி நின்றொழுகும் உபவதியர் உத்தமியார்
பண்புதை தங்கம்மாவும்
அடல்பலகல்வியிற் சேர்ந்த உயர்வனிதையராசிரியருமாமும்
அன்புட னமரர்க் காதரவு நல்கு நற்றோழியராயினர்.

திருமணம்

தலைவிதிப்படி கரமலைவதால் தீதறியாளுந் தீராத
காதலாகிக் கடிமணம் புரிந்தனள் காருண்யன்
சதாசிவரத்தினனை
தலைநகர் கச்சேரியில் சேவை நண்பருட னுறவினர்சூழவுயர்
அரசு பதவிநர் ''செந்தமிழ்ச்சின்னத்தம்பி'' யும் பண்
பொடு பல
கலைபயின்ற பட்டதரியாசிரியர் ஜே.டீ. ஆசிர்வாதமும்
பதிவேட்டில் நற்சாட்சிகளாய் நாடிக் கையெழுத்திட
நிலைப்பேறுடை திருமணம் பதிவு நிறையாண்டு
ஐம்பத்தைந்தில்
நிற்குண வாசியால் இனிது நிறைவேறியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்கொடி யின்பெற்றா ருமுற்றாரு விளைந்தாங்கு
தீந்தமிழர்
கொற்றவன் கொலுவீற்றிரு வா இத்தலைநகர் நல்லூரின்
பொற்கோயிலில் பொருத்தமுறு நன்னாளி லடுத்தாண்டு
பற்றுடன் மாங்கல்யம் ஏற்றனள் பங்கேலோராசி நல்ல
நற்குடியாய் நன்னான்காண்டு மகிழ்வுடன் மாநகரி
லாற்றியில்லறம்
மணாளனின் உயர்கல்விப் பேறுகண்டு பூரித்துந் தான்
பெற்றெடுத்த மகவில்லையென மனக்கவலை வாட்டியதால்
சேவைமாற்றத்துடன் சதிபதிகள் சேறினர்
சொந்தவூர் சுன்னாகம்.

## பிறந்த ஊரில் ஆசிரியப்பணி

உறவினர் சீருடன் வாழ் சுன்னைநகரிற் குலந்தழைக்க
மூதாதையர் ஏழ்பத்து வருட முன்பு
கல்விவித்திட்டமைத்த
உரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில்
உவகையுட னாற்றினாள் ஆசிரியப்பணி பன்னீராண்டு
கற்றறி கணவன் முன்னோர் செய்தவப் பயனாலோர்
கறையில் சட்டத்தரணியாய் குலத்தில் முன்னோடியாக
அறமுட னாற்றுபணிக் கமரர் மலைபோற் றுணையானார்
வேறவர் பின்பு நீதாசனப்பவர் யேற்றக்கால்
நிறைமகிழ்வெய்தினளே.

பாசமிகு தம்பி பட்டய நில அளவை அலுவலர்
பண்புசேர் ஞானரத்தினமு மில்லாள் நற்கொடியாம்
பாசமும் பரிவுமுள்ள நன்மைத்துனி பலசீருடை சிவநேசமும்
பாலகரறுவராம் கிரிதரன் சத்யதரன் சேந்தரனும்
மாசற்ற புதல்வியர் கோமதி துஷ்யந்தி தமயந்தியும்
மாதா பிதாவழி மைத்துனிகள் தவம திருத்தகலை
புஷ்கலையும்
தேசுசேர் செல்வராணி கனகம் சத்யா நிருமா சுசியும்
சலாவும் அரிய இராசமலர்களும் நாகம்மாவு
மிவர் நற்சுற்றமே.

தாய்வழி தளைத்திடத் தரணியி லிவர்க் குறுதுணையாத
தங்கை தவமணியொடு சோதரி தங்கமணியுழில் மகிழ்மகரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்த்த கணவர் இருவழி நெருக்கவுறவினன் வாலறிவன்
நற்றான் நாடோறும் தொழும் நல்லாசிரியர்
நாகராசாவும்
வாய்மையுடன் செம்மைசேர் வளர்மைந்தர் துளசிதாசன்
இலட்சுமணன் கண்ணன் துரந்தரி தாட்சாயினி உற்ற
சேய்களாய்ப் பெற்ற மகவிலாக் குறைகுன்ற வரையிலா
வாஞ்சையுடன் வளர்த்தனளே தன்சீர் மனையில்
வருதுயரகற்றி.

திருவுடன் திறன்சேர் தம்பி வகிலணியன்
அருள்ஞானசுந்தரமும்
செங்கதிரொளி மேனித்துணை மனோரஞ்சிதமும்
அருமை மகவொன்றின்றி தான் போல்
தவிக்கவொண்ணாதென
அமரர் வேண்டுதல் செய்யாத தெய்வமில்லை
வேறு இவர்களுடன்
பெருமையொடு அண்மையில் தலைநகரேகி கோளில்கள்
அரிசித்து
உற்றார் உறவினர் நண்பர்கள் நல்லுறவை மீட்டு
உரிமையுடன் மருகன் கிரிதரனின் திருமணமும் கண்டு
களித்தனளே.

கணவரினிருகண்போற் சோதரிகளிருவரில்
சந்ததி யளருசேர் சபாபதி துணை சாந்தமுடை வாழ்
அணங்கு பூமணியு மவரீன்ற புதல்வர் சனப்பிரிய வணிகன்
புஷ்பநாதனும்
துணை சம்பத்துப் பலவுடை சரோஜினிதேவியும்
புதல்விகளிருவரும்
இணங்கு சிந்தையுடை இனியவர் வணிகன் ஜெகந்நாதனும்
துணை கோணாத திருவு மழகுமுடை
செல்வி சுகந்தினியும்
துணையினுந்தோடா புதல்வர்கள் செல்வநாதன் சபாநாதன்
சத்தியநாதன் சற்குணநாதனும் அமரரின் அன்புசால்
சுற்றமாம்.

போற்று மழகுநெறியும் சேர் உயர் அலுவலர்
யோகராசாவும்
துணை சாந்தமொடு திருநிறை புஷ்பதேவியு மவரீன்ற
பற்றுடை பாலகரிருவரும் எழில்தோற்றமு முயர்வுநிறை
நற்காவலர் செல்வராசா வுந்துணை
எழில் ரஞ்சிகாதேவியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமுடை புதல்வர் சிறார் மூவரும் பொறையுடன்
நிறைவும்
சோதர பாக்கியமு முடை முத்துராசாவும் துணைபல
பேற்றுடை சுதேச மருத்துவர் ரேணுகாதேவியு மவர்
மழலைப் பாலகனும் ஏற்றமுடை இன சனமே யமரர்க்கு.

தன்னலம் பேணாத் தற்கொண்டானின் மூத்த சோதரி
தவமணியும்
புதல்வி கண்ணியம் சேர் தொழில் பேறுடை
திருஞானசுந்தரமும்
பன்னலம் நிறைதுணை மோகனரூபராணியும் நால்வர்
புதல்வியரும்
பற்றுடை ஊரறி நல்லான் சந்திரமோகனதாசும்
அன்புள்ள வவர் துணை அமராவதியு மவரீன்ற
புதல்வர்கள் நல்லெழில் மூவருடன் புதல்வி சர்மினியும்
இன்புற்று நல்ல சுற்றஞ்சூழ வாழ் அமரர்க்கு
உளந்நிறைந்த நல்லுறவினராம்.

தொன்புகழ் தமிழ்க்குலம்சேர் நிகழ் துயர் துன்பங்களாலும்
தான்சேருற்றார் சிலரது தாங்கொணா விடர்களாலும்
என்புடன் நசையும் சோர்ந்து கவலையால்
நோய்வாய்ப் பட்டு
இருவிழி யறுவைச்சிகிச்சைப் பின்விளை தாக்கத்தாலும்
நோன்புகள் பலவாற்றிய மெய்வருத்தம் மெலிவினாலும்
நோய்நீங்க நீண்ட காலம் மருந்துண்டு வந்ததாலும்
மின்னலை விஞ்சும் போக்கில் விளைந்ததே அசுரநோ
நெஞ்சில்
பின்னவன் விழித்ததில்லை பீதுர்தெய்வமாகினாரே.

## கணவன் புலம்பல்

ஆவித்த உன் பொன்னுடல் அழகு குன்றவில்லையே
துஞ்சுவார் மெய்யனைய தோற்றமுடன் துலங்கியதே
தேவியுன் தேன்முகம் தன்னொளி வீசியதே
நிமிடங்களைந்தின் முன்புநீ நித்ய கருமமாற்றி
பாவிகள் எம்மை விட்டேகிப் பரந்தாமனடி சேர்ந்தாயே
பாயிலே நீர் அழுந்தவில்லை படுநோயுமுறவில்லை நெஞ்சு
நோவினால சற்றேறாய்வுடன் மருந்துண்டுறங்கிவலையல றி
ஆவியகலும் அறிகுறி அற்பமுமன்றிருந்திலதேயந்தோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதரர் புலம்பல்

அன்னையின் பின்பு நீயெமக் கன்னையானாய்
அன்புடன் நம்நலம் நாடிநீ காத்தாய்
சுன்னை நகரில்நீ சுற்றம்சூழ வாழ்ந்துநல்
சுகக்குறை நீங்கநா மென்றும் விளைந்திருந்தும்
அன்றே எம்மொருவருடன் மருந்துபெறச் சென்றிருந்தும்
அந்தோவெம் மூழ்வினையால் எமைப்பார்க்காது
பேசாது சென்றனையே
என்னென்ன கூற எண்ணி விளைந்தனையோ நாமறியோம்
எவ்வாறுன் பிரிவை நாமிம்மையில் மறப்போம்?

## ஊறாமக்கள் புலம்பல்

பெற்றன்னையிற் பேரன்புடை பேரொளி பெரியம்மா
உற்றன்னையாய் உவகையுடன் வாழ்ந்திரே எமக்காக
பெற்றவர்போல் ஊணுடை யுறையுள் தந்தீரே
பெருநிதி தந்துஎம் வளர்ச்சிகண்டு களிப்புற்றீர்
பற்றுடன் பலவுதவி யாற்றினீரெம் பெற்றார்க்கு
உறுபசிபோற்றாது நாம் உண்டதன் பின்பே நீருண்டீர்
வற்றா தன்பிருந்து மெமக்குப் பேரிடியாய்ச்சடுதியாய்
விடைபெறா தேகியதால் விம்மி—விம்மி யழுகின்றோம்

## தேற்றம்

மன்னுயிர் மீட்க வகையறிந்திலர் மாந்தரின்னும்
மானிட வாழ்வு மகிழ்ந் திட்டுண்டிருப்பதற்கே
பின்னுமேன் இறந்தாரால் யாம் துயருறுவான்
பிணிபோற்றிப் பிறர்க்குதவிப் பிறவிப் பயனடைவோம்
தன்னுயிர் நீத்த தகவுடையார் போலென்றும்
தன்னுடல் தாங்கித் தகைசான்ற சொற்கேட்டு
அன்பின் தூய்மை துலங்க நல் வினையாற்றி
நெஞ்சில் வஞ்சமின்றி நெறியுட னீடுவாழ்வோம்.

(இவை, பூ. சதாசிவரத்தினம் யாத்தவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த மண்பேறு பெறுதலே உற்றதென்று
மறந்துமே மண்ணை மறத்தல் தப்பிதமென்று
சிறந்த தம் கல்வி சேவையின் திறம் தன்னை
சிறக்கவே கொழும்பு மாநகர் விட்டகன்று
உற்றதோர் சுன்னாகம் பெற்றதோர் மாற்றம் பெற்று
உற்றதொழில் ஆசிரியம் பெற்றபே றென்றெண்ணி
பற்றுடையோர் பாசம் வைத்து பரிவுடனே
இத்தரையில் வந்தினிதே பணிசெய்தனளே.

பெற்றோரு முற்றார் இணை பிறந்த உறவினரும்
சுற்றோரும் களிப்புற களித்தே மனமகிழ்வுடன்
உற்றதோர் றோமன் கத்தோலிக்க பாடசாலை தன்னில்
மற்றதோர் உதவி அரியதோர் ஆசிரியையாகி
பண்பும் பணிவது மின்பமுடனிணைந்து நல்ல
குருவெனப் போற்ற மனநிறை வெய்தியும்
மாணவர் மனத்தெண்ணம் மதிநுட்ப முடனறிந்து
பாடத்தைப் புகட்டும் புகழ்ச்சுவை பெற்றனளே.

பணிசெய்த இடமென்றும் பிணிநீக்கு மென்றுணர்ந்து
கனிகை மலையாள் ஆலய கணமதனை ஞாலமறவாது
சேவை நலன்கள் பல நாடியே வந்துறவே
மாணவர் மன்றத்தின் சாலத்தலைமை பொறுப்
பேற்றும்
அம்பேத்கார் மன்ற மாதர் தலைமையதும் தாங்கி
போசாக்குணவுத்திட்டம் சாதனையைச் செயலாக்கி
வேதனைகள் மக்கள்சோதனையை போக்கவொண்ணா
சாதனைகள் பலபுரிந்து தொண்டுநிதம் ஆற்றினையே.

பேறொன்றில் பிள்ளையில்லா பிதற்றலேதுமின்றி
பெற்றாளே தங்கையின் பிள்ளைகளைப் பேறாக்கி
பற்றெல்லாம் பாரிலொன்றாய் பரிதியினொளி
யொன்றாகி
உற்றபேருன்பம் வேறொன்று மூலமினியில்லா நின்றாள்
தம்பியின் சேய்களாறும் தம்முடனிணைந்து வாழ்ந்து
குஞ்சர முகத்தான் துணைகூட்டியே நின்றென்றும்
வஞ்சகமில்லா வாழ்க்கை வாழ்ந்துமே உயர்வு பெற்று
நெஞ்சிலே வஞ்சமின்றி மற்றோர்
நினைவினிலே நிலைத்தனளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றோரைக் கண்டுணர்ந் தினிய கருத்துப் பரிமாறுதலும்
உற்றோ ருறவினரோடு உவந்து பசரித்துண்டு
பெற்றோ ரினம்நாடி பெருமை கொள்ள உறவுபூண்டு
கற்றோருக்கில்லா கடும் சினம்வெகுளி யேதுமில்லா
பொற்றாமரை போல் புதுமை குன்றா பூவையினென்று
பூதலத்தி லுள்ளோர் புகழ்ந்துரை புனைந்து நிற்க
எக்காலத்திலுமை நாம் காணா எழில் ஞானமணியுமை
பிற்காலத்தில் காணவிங்கு பிறிதொரு வுருக்கண்டியே.

வினையி லொன்றில் பிறவியெடுத்துப் பிணிநீக்கி
அருளுடையா னம்பிகைபாகன் றினமருள் வேண்டி
தினமதுமறவா திருமந்திர மோதித் திரிந்தகாலை
உருவமும் மாறி உடலணுவாகி யுருவொன்றாய்
கருவினில் கொண்டரிய அணுவது அழிந்து மண்ணில்
காலமதென்ன காலன் வந்து கடிதுகொண்டேக
ஞாலமதொன்றில் நாமொன்றுகூடி நவின்றொன்றாகி
வேதனையல்லால் வேறொன்றுமில்லையெம்
பெருமான்துணை.

## தோற்றம்

வினைப் பயனால் பிறந்து மனைவில் மனை
நாமம் வழுவா தொழுகி
கலைக்கரசாய் கருமணியாய் கனம் காணும்
இறை நாமம் மறவா தொழுது
உருத்தான உறவினரோடு உவந்தளித்து
நித்த உறவு கொண்டு
சுருத்தானம் மிக்க கருத்துரைகள் களவின்றி
நவின்று கலந்துரைத்து
பொருட்டாக வாழ்வை நம்பா புகழாரம்
சூதாப் புதுமை மாதாய்
அனுட்டானம் தவறா நிதம் நோன் பேற்று
அம்பிகை பாகன் தாள் சேர்ந்தனையே.

## கதிர்காமக் கந்தன் துதி

கதிர்காமக் கந்தன் திருக்கோலம் காணக்
கண்ணாயிரம் வேண்டும்
கதிர் வேலனின் குன்றில் குதித்தேறி யவனைக்
கதியென்ன டேக வேண்டும்
செல்வக் கதிர்காமப் பாதையோரக் கருங்குன்றில்
தொட்டுத் திலகமிட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செகபவளச் செல்வி வற்றி இணைப்புலம் நன்கு
சேவித்து வர வேண்டும்
கதிர்காமக் கங்கையில் களித்துக் குளித்தேழி
கந்தனருள் பெற வேண்டும்
காலமெல்லா மவன் சுழலடி போற்று வோர்க்கு
காரியம் கை கூடும்.
(இவை நா. நாகராசா அவர்கள் இயற்றியவை)

## தேவாரம்

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதும் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீரும் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.

துஞ்சலுந் துஞ்ச லிலாத போழ்திலும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செழுத்துமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாமம் நமச்சி வாயவே.

ஆடும் மெனவும் மருங்கூற்ற முதைத்து வேதம்
பாடும் மெனவும் புகழல்லது பாவநீங்கக்
கேடும் பிறப்பும் மறுக்கும் மெனக்கேட் டீராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே.

உற்றா ராருளரோ — உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக்கு
உற்றா ராருளரோ.

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

மனைவிதாய் தந்தைமக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ்நாகை மன்னுகா ரோணத்தானை
நினையுமா வல்லீராகி லுய்யலா நெஞ்சினீரே.

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே.

வானந் துளங்கிலென் மண்கம்ப
மாகிலென் மால்வரையுந்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர்
வீழிலென் வேலைநஞ் சுண்டூ
னமொன் றில்லா வொருவனுக்
காட்பட்ட வுத்தமர்க்கே.

## திருவாசகம்

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார் இங்கு யாவரும்
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

## திருப்புராணம்

மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும்; ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகி திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

தானே பிறந்து பயன்படைத் தேன்அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன் இமையெயல் லாம்அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தெய்வமாம்

**திருமதி சதாசிவரத்தினம் ஞானமணி**

அவர்களது

ஈமக் கிரிகைகளில் (1992-12-29ல்)
கலந்துகொண்டு சிறப்பித்த அனைவர்க்கும்,
அன்றைய தினம் பல விதமான உதவிகள் புரிந்தவர்க்கும்,
அனுதாபச் செய்திகளை அனுப்பியும்
வேறு வழிகளில் ஆதரவு நல்கியும்
உதவியவர்களுக்கும்
எமது குடும்பத்தவர் ஒவ்வொருவரும்

**நன்றியுடையோம்.**

1993-1-26 செவ்வாய்க் கிழமை நடைபெறும்
அந்தியேட்டிக் கிரியைகளிலும்
1993-1-27 புதன் கிழமை நடைபெறும்
சபிண்டீகரணக் கிரியைகளிலும்
கலந்துகொண்டு
இக்கிரியைகளைச் சிறப்பித்தவர்கட்கும்

**எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.**

**வணக்கம்.**

அன்னாரின் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாரின் ஆத்ம சாந்திக்கும்
ஈடேற்றத்துக்கும்
மற்று அனைத்து
விண்ணுலகப் பேறுகளுக்குமாக
நாம்







வழிபடு தெய்வங்களைக்
கைகூப்பித் தொழுகின்றோம்.

அமரத்துவமெய்தியவரின்
— குடும்பத்தினர்.

வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org